1083



உ
சிவமயம்.

வீரப்பூர் தேவஸ்தானம் தர்மகர்த்தாவாகிய

**மகா-ா-ா-ஸ்ரீ வீரமலை ஜமீந்தாரால்**

வருஷாந்திரம் நடக்கும்

**கன்னிமாரம்மன் திருவிழா**

# மகிமைச் சிந்து


இவை
அரசுநிலைப்பாளையம் வைத்திலிங்கம் செட்டியார் குமாரன்
வெள்ளைச்சாமி செட்டியார்,
ப. கோ. கருப்பண்ணன்
இவர்களால் இயற்றியது.



...ல் ஜனானுகூல பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.
1931
...தன் விலை அணா 1.



Q25:417
N3/
181662

உ

சிவமயம்.

# கன்னிமாரம்மன் திருவிழா

# மகிமைச்சிந்து.

---

விநாயகர் காப்பு.

சுந்தரஞ்சேர் வீரப்பூர் தனில் நடக்கும்
விந்தையுடன் கன்னிமார் திருவிழா வேடிக்கையை—
[மைந்தனுன்

செந்தமிழால் சிந்தாகப் பாடுதற்கு
கந்தனுக்கு மூத்தோன் கணபதி தாள் துணை.

ஜௌத்திரி வருஷத்திலே என்ற மெட்டு.

1 வருஷத்திற்கோர் தடவை வருகிறதோர் மாசிமாதம்
வீரப்பூரில் நடக்கும் விநோதமான திருவிழாவின்
மகிமையேயிது பாரும் நான் மகிழ்ந்துரைப்பேன் கேளும்

2 வீரப்பூர் ஜமீன்தாரல் விமரிசையாய் நடத்திவரும்
தீரமுள்ள பொன்னர்சங்கர் திருவிழா மகிமைதனைப்
பார்த்தவர்க்கே கண்யம் இதைப்பார்த்திட்டாலும்புண்யம்

3 சதயநட்சத்திரத்தில் சாமி கொடியேத்தம் வைத்து
பத்துநாள் காப்புகட்டி பண்புடனே தேர் நடத்தும்
அருமையுள்ள ராசர் இவர் பெருமையுள்ள நேசர்

4 மண்டகப்படி நடத்த மகாராசா வருகும்போது
வண்டி மாடு மணிகள் சத்தம் வானுலகம் கேட்கும்படி
ஓட்டுவாரே டிரைவர் காட்சிகாட்டுவாரே வாணர்

5 எண்டிசையும் ஜனங்கள்கூட்டம் இருபுரமும் தேவடியாள்
செண்டுமல்லிகைக்கொண்டு வெண்சாமரம் வீசிக்கொண்டு
வருகும்போது துரைகள் பெருமைபேசுவாரே சனங்கள்

6 வேட்டு யுத்காப்புகளும் விபரீத வாணங்களும்
நாட்டமுடன் நடத்திவரும் இராமச்சந்திரத்துரையவர்கள்
பெருமையதனைக்கூடி சனங்கள் பேசுவாரே நாடி

7 காளை வாகனந்தனிலே கன்னி பெரியக்காண்டியும்
ஏழுநாள் மண்டகமும் இன்பமுடனே நடத்தி
வருகும்போது ஆட்டம் சனமகிழ்ந்துமே கொண்டாட்டம்

8 எட்டாநாள் திருவிழாவை இன்பமுடன் சொல்லிவாரேன்
திட்டமுடன் கேட்பீர்களே சிறியன்மேல் பட்சம்வைத்து
மகிமையேயிது பாரும் நான் மகிழ்ந்துரைப்பேன் கேளும்

9 ரோகணி நட்சத்திரத்தில் நோன்பு விரதம் பிடித்து
வாகுடைய கோயிலுக்குள் வந்து மன்னர் நுழைந்தவுடன்
தேங்காய் பழம் பூசை அங்கு நடத்து மணி ஓசை

10 பூசை முடிந்தவுடன் புண்ணியர்கள் பொன்னர் சங்கர்
நேசமுடன் குதிரையேறி நாங்கள் போறோம் வேடபறி
என்றுசொல்ல தங்கை அப்போ எடுக்குமே செம்பை

11 வேட்டைக்குப் புறப்பட்டு வெளியிலே வந்தவுடன்
நாட்டமுடன் விழுகும் ஆரம் நான் சொல்ல முடியாது
இதைப்போலில்லை வேறு இவ்வுலகிலேயே பாரு

12 இந்தக்குதிரையைப்போல் யெவ்வுலகும் கண்டதில்லை
அந்தமுள்ள குதிரையிது ஆட்டத்திலே போகுது பார்
இதுவும் ஒரு அருமை இதைப்போலில்லை பெருமை

13 ஆதியிலே யிவருக்கென்று அயனும் அளித்திட்டானே
மேதினியிலெப்போதும் மேன்மையுங் கியாதிபெற்ற
பொருமையுள்ள பொன்னர் அருமையுள்ள சங்கர்

14 ஆதிநாள் வழக்கப்படி அதிவீரபோகிச் சாம்பான்
குதிரைக்கு முன்பதாக குணமுடன் நகாரடித்து
பொன்னர் சங்கர் முன்பு அவன் போகிறதும் தென்பு

15 மேற்குமுகமாய்த்திரும்பி வேடர்பரி போகும்போது
கார்க்கும் தெய்வம்நீயென்று கைகூப்பிச் சனங்களெல்லாம்
ஓடுவார்கள் வேர்க்க அங்கே வேடபரி பார்க்க

16 வேடர்பரிமுடித்து மேன்மையுடன் திரும்புமுன்னே
வேண்டாரைச் சங்கரிக்கும் விசையர் போன்றண்ணனுக்கு
தண்ணீர் கொண்டங்கே வருவதைப்பார் தங்கை

17 களைப்பார அண்ணமார்க்கு கஜமேறித்தண்ணீர்கொண்டு
இளைப்பாத்தி மண்டபத்தில் இன்பமுடனிருந்துகொண்டு
பார்த்திட்டாளே தங்கை அண்ணரைக்காணுமென்றசங்கை

18 அண்ணமார் வந்தவுடன் அருங்கிளி நல்லதங்காள்
கண்ணியமாய் செம்பெடுத்து கையதனிலே கொடுத்து
உடனே களைப்பாத்தி அண்ணரை இறக்கி விடையாத்தி

19 களைப்பாத்திமண்டபத்தி களிப்புடனிருந்து
விளையாட்டு வேடிக்கையும் விநோதமாய் நடத்துவது
உண்மையான சேதி நான் ஓதுவது நீதி

20 விடையாத்தி மண்டபத்தில் வெகுசனக்கூட்டம் பாரு
கடைகளோ ஏராளம் கணக்கிலடங்காதுபாரு
தாசுமகால் பீடி ஜனங்கள் குடிப்பாரே ஜோடி

21 அங்கங்கு நின்றபக்கம் அநேக டிராமாக்கம்பெனியாம்
எங்குள்ள சனங்களெல்லாம் இதனைப்பார்த்து நிற்பதுவும்
இதுவும் ஒரு ஜோக்கு இடையில் வெத்திலைபாக்கு

22 இந்தப்படி யிதுயிருக்க இன்பமுள்ள மகாராசா
விந்தையுடன் சதுர் ஆட்டம் வேடிக்கை நடத்துவதை
தேவர்களும் பார்ப்பார் மூவர்களும் கார்ப்பார்

23 சதுராட்டம் நடந்தவுடன் சாமிபொன்னர் சங்கருக்கு
எதிர்கொண்டழைப்பதற்கு இன்பமுடன் தழுகைவரும்
தழுகை வந்தாலாட்டம் தகுந்த சனங்கள் கூட்டம்

24 கோவிலிலேயிருந்து கொண்டுவந்த தழுகைதன்னை
வாயைகட்டி பூசைபோட்டு வன்மையுடன் தங்காளுக்கு
ஜோடிப்பார் பல்லாக்கு அதில் கிளிகள் வெகுஜோக்கு

25 தகதகென்ற பல்லாக்கின்மேல் தங்காளை ஏற்றிவைத்து
விகசிதமாய் எல்லவரும் மேன்மையுடனப்பொழுது
கிளம்புவாரே விரும்பி கிழக்குமுகமாய்த்திரும்பி

26 மேனாட்டைக் கருவருத்த மேன்மையுள்ள பொன்னருக்கு
வாணவேடிக்கை நடத்த வந்திட்டாலே மேற்குவீதி
காந்தலைட்டின் ஜோதி காணக்கொள்ளாது வீதி

27 எட்டிலடங்கா தீவிட்டி எண்ணமுடியா மத்தாப்பு
பாட்டிலடங்காது வாணம் பகருகிறேன் கொஞ்சமாக
நேசர்களே வாருமிதை நேர்மையுடனே பாரும்

28 தோறண வாணங்களும் சுழலும் தும்பி வாணங்களும்
சரமாரி பொழிந்தாப்போல் சங்கர் பொன்னர் முன்பதாக
விநோதங்களைப் பாருமினி விரசுடனேவாரும்

29 அவுட்டொன்றடித்திட்டாலே அண்டம் கிடுகிடெங்கும்
தெவுட்டாது சனங்களுக்கு தினமுமிப்படி பார்த்திட்டாலும்
நட்சத்திரம்போலே அவுட்டில் பூக்கள் தோன்றும் மேலே

30 முத்தரசர் மண்டபமும் முகமையுடன் நடத்தியங்கே
சத்தியுள்ள பொன்னர் சங்கர் சாமி குடிபுகுவார்
குடிபுகுந்தால் பார்த்து சனம் கைகொட்டுவார் சேர்த்து

31 தேரை அலங்கரித்து தென்புடனே மற்றநாள்
மிருக சீரிட நட்சத்திரம் மேதினியில் வந்தவுடன்
தேரை வடம்பிடித்து தென்புடனே யிழுத்து

32 கன்னிபெரியக் காண்டியும் கனமுடனே தேரின்மேலே
புண்ணியஞ்செய் மகாராசா புனிதமுடன் குதிரையின்மேல்
வீதிசுத்திப்பார்ப்பார் சனங்களையும் காப்பார்

33 இந்தவிதமாகத்தேரு இன்பமுடனிழுத்தபிறகு
சந்தனப் பொட்டுக்காற சாமி எங்கள் மகாறுசாவை
கூடாரத்தை நாடி அழைத்துபோவார் கூடி

34 சனங்களெல்லாம் கன்னிமாரகு தேங்காய்ப்பழம் பூசைசெய்து
முனியப்பன் கோயிலுக்கு முக்கியமாய்ப் போவதைப்பார்
சனங்கள் வெகு கூட்டம் பேய்கள் ரொம்ப ஆட்டம்

35 கூடாரத்திலேயிருந்து குணமுள்ள மகாருசாவை
ஆடம்பரத்துடனே அழைத்துவந்து கோயிலுக்குள்
பல்லாக்கைத் தூக்கி பத்தாம் மண்டபத்திலிறக்கி

36 பத்தாம் நாளில் காப்பு பண்புடனே சத்தாவர்னம்
மத்தாப்பு வாணமோடு மகிழ்ச்சியுடனே நடத்தி
தாசி சதுர் நடத்து சத்தா வாணத்தை முடித்து

37 கன்னி பெரியக்காண்டியும் கனமுடனே பல்லக்கின்மேல்
கன்னியமாய் வீதிசுத்தி களிப்புடனே கோயிலுக்குள்
இருப்பதுவும் நீதி இதைப்போலில்லை கியாதி

38 திருவிழா வேடிக்கையை சிறப்புடனே நடத்தியபின்
அரண்மனைக்குப் புறப்பட்டு அன்புடனே வரும்போது
சம்சம்மென்ற நேத்யம் சகல மேள வாத்யம்

39 மன்மதன் போலுலகுடைய மகருசாவை சிப்பந்திகள்
அன்புடனே அரண்மனைக்கு அழைத்துக்கொண்டு வந்தவுடன்
திஸ்டி வேட்டி சுத்தி எடுப்பார் தென்புடனாலாத்தி

40 இந்தவித வேடிக்கையாய் இன்பமுடன் தேர்நடக்கும்
சொந்தமுள்ள இந்துக்களை சொல்லிவந்தேன் தெரிந்தவரை
கனவான்களே வாரும் மிதை குணமுடனே பாரும்

41 வாசமுள்ள அரசுநகரில் வாழ்து வரும் வெள்ளைச்சாமி
கருப்பண்ணன் சொன்னபடி கவனமுடன் இந்தச்சிந்தை
பாடினோமே நாங்கள் பதந் தந்திடுமே நீங்கள்

42 கண்ணிமாரருளினாலே கனம் ராமச்சந்திரர் வாழி
இன்னிலத்தில் படித்தோர் கேட்டோர் இன்பமுட
னச்சிலிட்டோர்
வாழி வாழி யென்று ஈசன் வரங்கொடுத்தார் நன்று.



இச்சிறியேன் பாடியதில் ஏதாவது பிழையிருக்குமாகில் கிருபை கூர்ந்து கனவான்களெல்லாம் பிழையறப் படிக்கவேணு மாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,

வை. வெள்ளைச்சாமி செட்டியார்.

போவதும் வழியும் தெரியலையே என்செய்வேன்
வட ழுண்டுமாராட்டம் கொள்ளுகிறான் எங்கு போவேன்

பாப்பா இவன்செய்கை அனியாயம் இதை
செப்பதுணிந்தவர்கள் சேருவரோ பெருங்கையாயம்

9 சாலப்புவிதனில் வேலைக்கொருவிதமாய் திருநாளே இந்த
பாலன் குருசாமி பாடும்பதமிது பெருமாளே

(லாவணி)

1 கல்லங்குரிச்சியில்வாழ் கலியபெருமாளையும்
காணவந்தேன் யாத்திரையாய் நாடி நாடி

2 கம்புசோளம் கேழ்வரகும் கனத்ததானியங்களும்
அப்பாரமாய் கொண்டுவந்தேன் ஓடி ஓடி

3 வேண்டிவந்த காணிக்கையும் எண்டிசையும் சீர்பெறவே
வண்டியிலே கொண்டுவந்தேன் தேடி தேடி

4 ஆடுடனே கோழிகளும் அந்தமுள்ள மாடுடனே
காடுமேடும் தாண்டிவந்தோம் அய்யா அய்யா

5 வந்தவினைகள் எல்லாம் உந்தனைபின் துடர்ந்தால்
வந்தவழி தன்னைப்பார்த்தும் ஓடும் ஓடும்

6 கலியுக காலத்திலே கண்கண்ட தெய்வமாக
நாளில் வழங்கிவாரீர் அய்யா அய்யா

7 எங்கும் சுற்றிதிரிந்து எங்கிமனம்கலங்கி
தங்குமிடம் பார்த்தேனைய்யா வாடி வாடி

8 கோடான கோடிஜனம் கூட்டமாய் வந்திருக்கார்
நாட்டமுடன் பஜனை பாடி பாடி

9 செங்கமலக்கண்ணனே அங்கமுடனே கண்டேன்
பங்கம் அகற்றிவரம் தாரும் தாரும்

10 தாசன் குருசாமிபவர் நேசன் உரைத்தகவி
தேசமெங்கும் புகழும் அய்யா அய்யா

கும்மி

1 கல்லக்குறிச்சி கலியனடி கலிகாலத்துக்கேற்றதோ...
நல்ல சித்திரை மாதத்திலே
நாடியே கும்மி அடித்திடுவோம்

2 திரவிசாரணை செய்வாராம் தீராதவல்வினை தீர்ப்பாராம்
வரதராஜப்பெருமாளாம் அவரை
வாழ்த்தியே கும்மி அடித்திடுவோம் கல்

3 ஓடாதவல்வினை ஓடுமடி ஆடாதபேய்களும் ஆடுமடி
காடான காட்டுமேல கலியனை போற்றியே
வாடாமல் கும்மி அடித்திடுவோம் கல்

4 எண்ணிபலகோடி மன்னவர்கள்கூடி கண்ணனைநாடியும் வந்திருக்
பண்ணியபாவங்கள் போகணுமே என்று (கார்
புண்ணியன்பேர்சொல்லி அடித்திடுவோம் கல்

5 வண்டுகள் ரூபமும் கொண்டலைந்து அய்யா அண்டபுவனமும்
கண்டுகொண்டேனடி கண்ணன்பெருமாளை (தான்பார்த்தேன்
பெண்டுகளா நீங்கள் போற்றுங்கடி கல்

6 ஆவியாய்நின்று அரசாளும் ஆலிலேகண்ணனை நாம் தேடி
கோவிந்தம் கோவிந்தம் என்றுரைத்து அவரை
கோஷ்டியுடன் விளையாடுவோம் கல்

7 நாட்டில் உள்ளவரும் காட்டில் உள்ளவரும் பாட்டைப்படித்து
நாட்டார் புகழும் நம்முடைய காந்தி (உணர்ந்தவரும்
வாட்டமில்லாமல் தினம் வாழ்கவே கல்

8 கும்மி அடியுங்கள் கும்மி அடியுங்கள் கோலாட்டகும்மி
கும்பகோணம் குருசாமியின் பதத்தால் (அடித்திடுங்கள்
கோபாலாயென்று நடித்திடுவோம் கலி

முதல் பாகம் முற்றிற்று.

---

பாலகவி, K. குருஸாமிதாஸ் அவர்கள் இயற்றிய கலியபெரு-
மாள் சிந்து இரண்டாம் பாகம் புஸ்தகம் பார்க்கவும்.